**தலைப்பு 234 - உயர் நீதிமன்ற பதிவாளர் திணைக்களம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 234 உயர் நீதிமன்ற பதிவாளர் திணைக்களத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டு கொள்கைகளுக்குரிய தகவல்கள் உள்ளடங்கலாக நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் உயர் நீதிமன்ற பதிவாளர் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளையும் அவதானிப்புக்களையும் உள்ளடக்கிய பொழிப்பு அறிக்கை 2024 மே 28 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கக்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2024 யூலை 18 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ளள விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து நிதி கூற்றுக்கள் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு உயர் நீதிமன்ற பதிவாளர் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நிநயாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

எனது அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கெண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்கவும் உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையிலும் நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிரழ்கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடிய உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(1) ஆம் உபபிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடிய வகையில் தமது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளைப் பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக்கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை ஒன்று தயாரித்து பேணப்படுகிறது என்பதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டி இருந்ததுடன் இம் முறைமையின் செயற்றிறன் தொடர்பாக காலத்திற்குக் காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்றிறனாக மேற்கொள்வதற்குத் தேவையான மாற்றங்கள் செய்யப்படுதல் வேண்டும்.

### 1.4 நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து விடுபட்டததாக நியாயமான உறுதிப்படுத்தல் ஒன்றை பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவதே எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர்மட்டத்திலான உறுதிப்படுத்தல் ஒன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தல் ஒன்றல்ல மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்கக் கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் தொடர்பாக ஏற்படும் தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கைக் கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒருபகுதியாக என்னால் தொழில்சார் தீர்ப்புக்கள் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்கலில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தினை இனங்காணுதல் மற்றும் மதிப்பீடு செய்வதற்காக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்ப்படுத்தப்பட்டன. பிழையானதாக காட்டுவதன் காரணமாக இடம் பெறுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்ளினால் எழும் தாக்கலினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கத்தினை பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு தவறான ஆவணங்களை தயாரித்தல் வேணடுமென்றே விட்டு விடுதல் பிழையாகக் காட்டுதல் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடி ஒன்று ஏற்படுவதற்கு காரணமாகிறது.
- உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயம் ஒன்றை தெரிவித்தல் கருத்தில் கொள்ளப்படாதிருந்த போதிலும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் பெருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பான விளக்கம் பெற்றுக்கொள்ளப்பட்து.
- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கபட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கபட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணபட்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்ட தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6 (1) (ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

(அ) இந்நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியிருந்தன.

(ஆ) முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் ஏற்றுக்கொள்ளப்பட்ட சிபாரிசுகள் அமுல்ப்படுத்தப்பட்டுள்ளன.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கருத்துரைகள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

**(அ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்ககூற்று**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 2023 சனவரி 01 ஆந் திகதியில் உள்ளவாறு முற்பணங்கள் ''பீ'' கணக்கின் மீதி திணைக்கள ஏடுகளின் பிரகாரமும் திறைசேரி கணனி அச்சுப் பிரதிகளின் பிரகாரமும் ரூபா 68,245 வித்தியாசமாக இருந்ததுடன் அது 10 ஆண்டுகளாக முன்கொண்டு வரப்பட்டுக் காணப்பட்டது. | அரசாங்க நிதிப் பணிப்பாளர் தேவையான செம்மையாக்கல்களை மேற்கொள்வதற்கு அங்கீகாரம் வழங்கியிருந்ததுடன் தற்பொழுது நாளதுவரையாக்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டது. | வித்தியாசத்தை அடையாளங்கண்டு சரிசெய்தல் வேண்டும். |

**(ஆ) முற்பணக் கணக்குகள் மீதி**

முற்பணக் கணக்குகளில் ஆண்டின் இறுதியில் உள்ளவாறான மீதியை கணக்கீடு செய்யும் போது பின்வரும் குறைபாடுகள் வெளிப்படுத்தப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (i) | 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பரீட்சை மீதியின் பிரகாரம் ஆண்டிற்கான மொத்த முற்பணங்களின் அறவீடுகள் ரூபா 18,983,754 ஆக இருந்த போதிலும் காசு பாய்ச்சல் கூற்றில் அப்பெறுமதி ரூபா 14,416,403 ஆக இருந்ததனால் காசுப் பாய்ச்சல் கூற்றில் முற்பண பெறுவனவுகள் ரூபா 4,567,351 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | பரீட்சை மீதிகளில் காசு ரீதியான கொடுக்கல் வாங்கல்களைப் போல குறுக்குப் பதிவுகளின் மூலம் மேற்கொள்ளப்படுகின்ற கொடுக்கல் வாங்கல்களும் உள்ளடக்கப்படுவதனால் காசுப் பாய்ச்சல் கூற்றினைத் தயாரிக்கும் போது காசு ரீதியான கொடுக்கல் வாங்கல்களை மாத்திரம் ஈடுபடுத்தி தயாரிகைப்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டது. | காசு ரீதியான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் குறுக்குப் பதிவுகள் ஆகிய இரண்டினையும் ஈடுபடுத்தி காசுப் பாய்ச்சல் கூற்றினை தயாரித்தல் வேண்டும். |
| (ii) | 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பரீட்சை மீதியின் பிரகாரம் ஆண்டிற்கான மொத்த முற்பணக் கொடுப்பனவுகள் ரூபா 24,544,976 ஆக இருந்த போதிலும் காசுப் பாய்ச்சல் கூற்றில் அப்பெறுமதி ரூபா 19,977,625 ஆக இருந்ததனால் காசுப் பாயச்சல் கூற்றில் முற்பணக் கொடுப்பனவுகள் ரூபா 4,567,351 ஆல் குறைத்து காட்டப்பட்டிருந்தது. | பரீட்சை மீதிகளில் காசு ரீதியான கொடுக்கல் வாங்கல்களைப் போல குறுக்குப் பதிவுகளின் மூலம் மேற்கொள்ளப்படுகின்ற கொடுக்கல் வாங்கல்களும் உள்ளடக்கப்படுவதனால் காசுப் பாய்ச்சல் கூற்றினைத் தயாரிக்கும் போது காசு ரீதியான கொடுக்கல் வாங்கல்களை மாத்திரம் ஈடுபடுத்தி தயாரிக்கப்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டது. | காசு ரீதியான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் குறுக்குப் பதிவுகள் ஆகிய இரண்டினையும் ஈடுபடுத்தி காசுப் பாய்ச்சல் கூற்றினை தயாரித்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவு முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| மிகை நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்ததன் காரணமாக 05 மீண்டுவரும் செலவு விடயங்கள் மற்றும் ஒரு மூலதன செலவு விடயத்தின் மதிப்பீடு செய்யப்பட்ட நிதி எற்பாடு 35 சதவீதத்திற்கும் 52 சதவீதத்ததிற்கும் இடைப்பட்ட அளவில் சேமிக்கப்பட்டிருந்தது. | 2023 சனவரி 27 ஆந் திகதிய 1/2023 ஆம் இலக்க பாதீட்டு சுற்றறிக்கையின் மூலம் அரசாங்கத்தின் செலவுகளை மிகவும் சிக்கனமாகப் பயன்படுத்துதல் மற்றும் அத்தியவசியமற்ற செலவுகளை முடியுமான அளவு குறைப்பதற்காக வழங்கிய அறிவுறுத்தல்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன் அதற்கிணங்க காட்டப்பட்டுள்ள சேமிப்புக்கள் ஏற்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டது. | சிக்கனம் மற்றும் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக கவனம் செலுத்தி உரிய அவதானத்தோடு மதிப்பீடு தயாரிப்படுதல் வேண்டும். |

### 2.2 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளை மேற்கொள்ளல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 2023 ஆம் ஆண்டிற்கான அனைத்து பொறுப்புக்களும் பதிவேட்டில் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான திறைசேரி SA 92 கூற்றினுள் உள்ளடக்கப்பட வேண்டிய போதிலும் 2023 ஆம் ஆண்டில் பொறுப்புக்களாக அடையாளம் காணாது 2024 சனவரி மாதத்தில் ரூபா 377,066 செலவு செய்யப்பட்டிருந்தது. | 2024 சனவரி மாதம் செலுத்திய ஐயவினாவில் காட்டப்பட்டுள செலவுகளை கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் பதிவேட்டில் உள்ளடக்க முடியாது என தெரிவிக்கப்பட்டது. | ஆண்டிற்கான அனைத்து பொறுப்புக்களும் பொறுப்புக்கள் பதிவேட்டிலும் SA -92 கூற்றிலும் உள்ளடக்குதல் வேண்டும். |

**2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்**

தெரிவுக் கணக்காய்வுப் பரீட்சிப்பின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றிலுள்ள ஏற்பாடுகளுடனான இணமன்மைச் சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்படுகின்றன.

**அவதானிப்புக்கள்**

| **சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு** | **பெறுமதி**<br><br>**ரூபா** | **இணக்கமின்மைகள்** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** | **சிபாரிசுகள்** |
|---|---|---|---|---|
| **(i) நியதிச் சட்ட ஏற்பாடுகள்** | | | | |
| 2006 இன் 12 ஆம் இலக்க முத்திரை அதிகாரச் சட்டம் | 10,073,805 | மூன்றாந் தரப்பின்ர்களுக்குச் செலுத்தப்படுகின்ற ரூபா 25,000 இற்கு மேற்பட்ட அனைத்து கொடுப்பனவுகளுக் காகவும் ரூபா 25 முத்திரைக் கட்டணம் அறவிட வேண்டிய போதிலும் 2023 ஆம் ஆண்டின் சனவரி மாதத்தில் 05 சந்தர்ப்பங்களின் போது மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகளுக் காக அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2023 ஏப்ரல் மாதத்திலிருந்து ரூபா 25,000 இற்கு மேற்பட்ட அனைத்து கொடுப்பனவுகளுக்க ாகவும் முத்திரைக் கட்டணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டது. | ரூபா 25,000 இற்கு மேற்பட்ட அனைத்து கொடுப்பனவு சந்தர்ப்பங்களின் போதும் ரூபா 25 முத்திரைக் கட்டணம் அறவீடு செய்யப்படுதல் வேண்டும். |
| **(ii) அரசாங்க நிருவாக சுற்றறிக்கை** | | | | |
| 2016 திசெம்பர் 29 ஆந் திகதிய 30/2016 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 3.1 ஆம் | - | திணைக்களத்தின் இரண்டு வாகனங்கள் சம்பந்தமாக சுற்றறிக்கையின் பிரகாரம் எரிபொருள் நுகர்வு பரீட்சிப்பு | இந்த வாகனங்கள் திருத்தம் செய்வதற்காக அனுப்பிவைக்கப்பட்டுள்ளதனால் திருத்தம் செய்யப்பட்டதன் பின்னர் எரிபொருள் | தொடர்புபட்ட சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| பந்தி | | மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | நுகர்வு பரீட்சிப்பினை மேற்கொள்வதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டது. | |
| 2016 திசெம்பர் 29 ஆந் திகதிய 30/2016 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 4.3 ஆம் பந்தி | 77,800 | திணைக்களத்தின் ஒரு வாகனத்திற்கு 2023 சனவரி மாதம் மேற்கொள்ளப்பட்ட ரூபா 77,800 திருத்தங்கள் சம்பந்தமாக சுற்றறிக்கையின் பிரகாரம் தகமைபெற்ற இயந்திர பொறியியலாளரின் சிபாரிசு பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | தவறுதலாக இந்த மோட்டார் வாகனத்திற்கு புதிய பெற்றியினைப் பொருத்துவதற்காக பொறியியலாளர் சிபாரிசு பெற்றுக்கொள்ளப்படவில்லை. எதிர்காலத்தில் இவ்வாறான தவறு இடம்பெறாமைக்கு உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டது. | தொடர்புபட்ட சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 2.4 முற்பணங்கள் வழங்குதலும் தீர்த்துவைத்தலும்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| நிதிப்பிரமாணம் 371(1) இன் பிரகாரம் குறித்த செயலுக்கான உப கட்டுநிதி வழங்கியதன் பின்னர் உரிய செயற்பாட்டினைப் பூர்த்திசெய்து 10 நாட்களுக்குள் உப கட்டு நிதி தீர்த்துவைக்கப்பட வேண்டிய போதிலும் 04 சந்தர்ப்பங்களின் போது ரூபா 350,000 தொகையான முற்பணங்கள் அவ்வாறு நிர்ணயிக்கப்பட்ட காலப்பகுதிக்குள் தீர்த்துவைக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் உரிய செயற்பாட்டினைப் பூர்த்தி செய்து 14 நாட்களுக்குள் முற்பணத்தை தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. | தொடர்புபட்ட நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 திட்டமிடல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
| --- | --- | --- |
| 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 02./2020 ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றறிகையின் 04 ஆம் பந்தியின் பிரகாரம் அடுத்துவரும் ஆண்டின் மீண்டுவரும் மற்றும் மூலதன நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்ப்படுத்துவதற்கான வருடாந்த பெறுகைத் திட்டத்தினை நடைமுறை ஆண்டின் திசெம்பர் 10 ஆந் திகதிக்கு முன்னர் தயாரித்து அதற்காக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் அங்கீகாரத்தினைப் பெற்று அதன் பிரதியை கணக்காளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்க வேண்டிய போதிலும் 2023 ஒக்தோபர் 30 ஆந் திகதியே கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டது. | தவறுதலாக அதன் பிரதி கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்பிவைப்பதற்கு முடியாதிருந்தது என தெரிவிக்கப்பட்டது. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
| --- | --- | --- |
| திணைக்களத்தின் ஒரு வாகனத்திற்காக ஒரு தனியார் நிறுவனத்திடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட குத்தகை வசதிகள் 2023 ஆம் ஆண்டின் போது செலுத்தி முடிவுறுத்தப்பட்டிருந்தும் அந்த வாகனத்தை நிறுவனத்திற்கு பொறுப்பேற்கும் நடவடிக்கை முடிவடைந்திருக்கவில்லை. | இந்த வாகனத்தை நிறுவனத்தின் பெயருக்கு பொறுப்பேற்கும் நடவடிக்கை தற்பொழுது இடம்பெற்று வருகின்றது என தெரிவிக்கப்பட்டது. | துரிதமாக உரிமையை பொறுப்பேற்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.3 அரசாங்க உத்தியோகத்தர்கள் பிணைவைத்தல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| நிதிப்பிரமாணம் 880 இன் பிரகாரம் மேன்முறையீட:டு நீதிமன்றத்தில் பிணைவைக்க வேண்டிய 09 உத்தியோகத்தர்கள் பிணைவைத்திருக்கவில்லை. | தற்பொழுது உரிய உத்தியோகத்தர்களின் பிணையை அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என தெரிவிக்கப்பட்டது. | நிர்ணயிக்கப்பட்டவாறு பிணையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.4 நட்டங்கள் மற்றும் சேதங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| நட்டங்கள் சேதங்கள் பதிவேட்டின் பிரகாரம் 2023 ஆம் ஆண்டின் போது திணைக்களத்தின் 02 குளாம் வாகனங்கள் விபத்துக்குள்ளாகியிருந்ததுடன் நிதிப்பிமாணத்தின் பிரகாரம் விசாரணைகளை நடாத்தி இடம்பெற்ற நட்டத்தை மதிப்பீடு செய்து நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கியிருக்கவில்லை. | இந்த இரண்டு வாகனங்களின் திருத்த வேலைகள் இன்றுவரை இட்ம்பெற்றிருக்காததனால் நட்டத்தை மதிப்பீடு செய்வதற்கு முடியாதுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது. | நட்டத்தை மதிப்பீடு செய்து உரிய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்குதல் வேண்டும். |

### 3.5 முகாமைத்துவ பலவீனங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| (அ) திணைக்களத்தின் ஒரு வாகனம் 2020 சனவரி மாத்திலிருந்து இன்று வரை 04 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் பழுதடைந்து காணப்படுவதுடன் இயந்திர பொறியியலாளரின் சிபாரிசு மாத்திரம் தற்பொழுது பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தும் திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த வாகனத்திற்காக இயந்திர பொறியியலாளரின் சிபாரிசு கோரப்பட்டிருந்தும் இன்றுவரை கிடைக்க வில்லை என தெரிவிக்கப்பட்டது. | திருத்தம் செய்யும் நடவடிக்கையை துரிதமாக மேற்கொள்ளுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2023 ஆகஸ்ட் 29 ஆந் திகதி சேவையிலிருந்து இடைநிறுத்திவைக்கப்பட்ட ஒரு உத்தியோகத்தரிடமிருந்து திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு அறவிட வேண்டிய கடன் மீதி ரூபா 183,000 ஆகும். | அரசாங்க நிருவாக அமைச்சின் பரீட்சிப்பு இன்னும் நடைபெற்று வருவதுடன் இன்றுவரை சேவையில் அமர்த்தப்படவில்லை என தெரிவிக்கப்பட்டது. | மீதியை துரிதமாக அறவீடு செய்தல் வேண்டும். |
| (இ) | 2023 ஆம் ஆண்டின் போது உயர் நீதிமன்றத்தில் 14 வழக்கு வகைகளைச் சேர்ந்த தீர்த்துவைக்க வேண்டி இருந்த மொத்த வழக்குகளின் எண்ணிக்கை 7,268 ஆக இருந்ததுடன் ஆண்டின் போது தீர்த்து முடிவடைந்த வழக்குகளின் எண்ணிக்கை 1,535 ஆகும். அது 21 சதவீதமாக இருந்ததுடன ஆண்டின் இறுதியின் போது தீர்த்துவைக்க வேண்டியுள்ள வழக்குகளின் எண்ணிக்கை 5733 ஆகும். அதற்கிணங்க ஆண்டின் போது வழக்குகளைத் தீர்த்துவைக்கும் சதவீதம் குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. | வழக்கு நடவடிக்கைகளை துரிதமாக நிறைவேற்றுவதற்காக தற்பொழுது நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது எனவும் அதற்கிணங்க விசேடமாக வணிக உயர் நீதிமன்ற மேன்முறையீட்டு ஆகிய ஏனைய வழக்கு நடவடிக்கைகளை துரிதமாக பூர்த்திசெய்வதற்காக பிரதம நீதிபதியின் வழிகாட்டலின் கீழ் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது எனவும் அதற்கிணங்க எதிர்காலத்தில் வழக்கு நடவடிக்கைகளை ஆக்கபூர்வமாக பூர்த்திசெய்வதற்காக நடவடிக்கை எடுக்கப்படுகின்றது எனவும் தெரிவிக்கப்பட்டது. | வழக்குகளை நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்குள் தீர்த்து முடிவுறுத்துதல் வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டின் போது மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் 23 வழக்கு வகைகளைச் சேர்ந்த தீர்த்துவைப்பதற்கு கோவை செய்யப்பட்ட மொத்த வழக்குகளின் எண்ணிக்கை 5,921 ஆக இருந்ததுடன் ஆண்டின் போது தீர்த்து முடிவுறுத்திய வழக்குகளின் எண்ணிக்கை 1,780 ஆகும். அது 30 சதவீதமாக இருந்ததுடன் ஆண்டின் இறுதியில் தீர்த்துவைக்க வேண்டியுள்ள வழக்குகளின் எண்ணிக்கை 4,141 ஆகும். அதற்கிணங்க மேன்முறையீட்டு பதிவாளர் அலுவலகத்தில் வழக்குகளைத் தீர்த்துவைக்கும் செயல்முன்னேற்றம் குறைந்த | வழக்கு நடவடிக்கைகளை துரிதமாக நிறைவேற்றுவதற்காக தற்பொழுது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனவும் அதற்கிணங்க விசேடமாக வணிக உச்ச நீதிமன்றம், மேன்முறையீட்டு நீதிமன்றம் ஆகிய ஏனைய வழக்கு நடவடிக்கைகளை துரிதமாக பூர்த்திசெய்வதற்காக கௌரவ பிரதம நீதிபதியின் வழிகாட்டலின் கீழ் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது எனவும் அதற்கிணங்க எதிர்காலத்தில் வழக்கு | வழக்குகளை நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்குள் தீர்த்து முடிவுறுத்துதல் வேண்டும். |

| | |
|---|---|
| மட்டத்தில் காணப்பட்டது. | நடவடிக்கைகளை ஆக்கபூர்வமாக பூர்த்திசெய்வதற்காக நடவடிக்கை எடுக்கப்படுகின்றது எனவும் தெரிவிக்கப்பட்டது. |

**4. நல்லாட்சி**

**4.1 உள்ளகக் கணக்காய்வு**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 40(1) ஆம் பிரிவிலுள் ஏற்பாடுகளின் பிரகாரம் உயர் நீதிமன்ற பதிவாளர் திணைக்களத்தில் ஒரு உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை. | நீதி அமைச்சின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் மூலம் உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்படுகின்றது என தெரிவிக்கப்பட்டது. | தொடர்புபட்ட அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வுப் பரிவு ஸ்தாபிக்கப்படுதல் வேண்டும். |

**5 மனித வளங்கள் முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | 2023 திசெம்பர 31 இல் உள்ளவாறு உயர் நீதிமன்ற பதிவாளர் திணைக்களத்திற்கு அங்கீகரித்த மொத்த ஆளணியினர் 558 ஆக இருந்ததுடன் அத்தகியில் உள்ளவாறான உள்ளபடியான ஆளணியினர் 430 ஆகும். அதற்கிணங்க 127 உத்தியோகத்தர்களின் வெற்றிடங்கள் காணப்பட்டன. | திணைக்களத்தில் காணப்படுகின்ற ஆளணி பற்றாக்குறை சம்பந்தமாக நீதித்துறை சேவைகள் ஆணைக்குழு செயலாளரிடம் வேண்டிக் கொள்ளப்பட்டது எனத் தெரிவிக்கப்பட்டது. | வெற்றிடங்களை துரிதமாக பூரணப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | கணக்காளர் தரம் III பதவிக்காக ஏனைய திணைக்களத்தின் ஒரு கணக்காளர் வாரத்தின் 02 நாட்கள் பதில் கடமை பார்க்கும் அடிப்படையில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன் | திணைக்களத்தல் காணப்படுகின்ற ஆளணி பற்றாக்குறை சம்பந்தமாக நீதித்துறை சேவைகள் ஆணைக்குழு செயலாளரிடம் வேண்டிக் | வெற்றிடங்களை துரிதமாக பூரணப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அப்பதவி 2022 சனவரி 03 ஆந் திகதியிலிருந்து 02 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக வெற்றிடமாகக் காணப்பட்டது. | கொள்ளப்பட்டது எனத் தெரிவிக்கப்பட்டது. | |
| (இ) | உச்ச நீதிமன்ற பதிவாளர் அலுவலகத்திற்கு நீதிமன்ற பதிவாளர் தரம் III பதவிக்காக 06 உத்தியோகத்தர்களும், சட்ட ஆராய்ச்சி உதவியாளர் பதவிக்காக 15 உத்தியோகத்தர்களும் நீதிமன்ற பெட்டக காப்பாளர் தரம் I, II மற்றும் III பதவிகக்காக 15 உத்தியோகத்தர்களும் நீதிமன்ற புத்தக பைன்டர்கள் பதவிக்காக 04 உத்தியோகத்தர்களும் உள்ளடங்கலாக 40 உத்தியோகத்தர்கள் வெற்றிடமாகக் காணப்பட்டனர். | திணைக்களத்தல் காணப்படுகின்ற ஆளணி பற்றாக்குறை சம்பந்தமாக நீதித்துறை சேவைகள் ஆணைக்குழு செயலாளரிடம் வேணடிக் கொள்ளப்பட்டது எனத் தெரிவிக்கப்பட்டது. | வெற்றிடங்களை துரிதமாக பூரணப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | மேன்முறையீட்டு நீதிமன்ற பதிவாளர் அலுவலககத்தில் நீதிமன்ற இலிகிதர், மொழி பெயர்ப்பாளர் புத்தக பைன்டர் ஆகிய பதவிகளில் வெற்றிடங்கள் காணப்பட்டதுடன் அந்த எண்ணிக்கை முறை 10, 09 மற்றும் 08 ஆகும். | திணைக்களத்தல் காணப்படுகின்ற ஆளணி பற்றாக்குறை சம்பந்தமாக நீதித்துறை சேவைகள் ஆணைக்குழு செயலாளரிடம் வேண்டிக் கொள்ளப்பட்டது எனத் தெரிவிக்கப்பட்டது. | வெற்றிடங்களை துரிதமாக பூரணப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |